இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடவுள் வடிவில் விளங்கிய கிறிஸ்து, கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். பிலி 2:6-9

# இனவெறியை ஒழித்திட, கலந்துரையாடல் கலாச்சாரம் தேவை -திருப்பீடம் வலியுறுத்து

**வத்திக்கான்:** ஏழைகள், ஒடுக்கப் - பட்டோர், உரிமைகள் மீறப்பட்டுள்ளோர், நோயுற்றோர், வன்முறைக்கு உள்ளானோர் ஆகியோரில், இயேசுவின் முகத்தைக் கண்டு உதவ, ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் எனத் திருப்பீடம் அறிவுறுத்து-கிறது.

இனவெறி என்ற தொற்றுக்கிருமியை ஒழித்திட வேண்டுமெனில், மனித மாண்பை மதிப்பதை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல் கலாச்சாரம் தேவைப் படுகின்றது என்றார், ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் துணைச்செயலர், அருள்பணி அகுஸ்தோ சாம்பினி.

இனவெறிக்கு எதிரான உலக நாள், கடந்த மார்ச் 21, ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பிக் கப்பட்டதற்கு முந்தைய நாள், திருப்பீடத்திற்கான அர்ஜென்டினா தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்கள் தலைமையில் நிறைவேற்றப்பட்ட திருப்பலியில் மறையுரை வழங்கிய, அத்திருப்பீட அவையின் துணைச்செயலர், அருள்பணி சாம்பினி அவர்கள், மற்றவர்களைத் தீர்ப்பிடுவதையும், மற்றவர்களைவிட தாங்கள், ஒருபடி மேலானவர்கள் என எண்ணுவதையும் கைவிட்டு, மன்னிப்பு, சேவை என்பவைகள் வழியாகவே இனவெறி எனும் தொற்றுக் கிருமியை அகற்றமுடியும் என உரைத்தார்.

சட்டத்தின் வழியாக மட்டுமல்ல, மாறாக, கலந்துரையாடல் வழியாக இனவெறியை துடைத்தொழிக்க முடியும் என்று கூறிய அருள்பணி சாம்பினி அவர்கள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், உரிமைகள் மீறப்பட்டுள்-ளோர், நோயுற்றோர், வன்முறைக்கு உள்ளானோர், ஆகியோரில் இயேசுவின் முகத்தைக் கண்டு உதவ ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் என விண்ணப்பித்தார்.




பாகுபாட்டு நிலைகளால் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு புது வாழ்வு வழங்க உதவும் நோக்கத்தில், மற்றவர்களையும், இயற்கையையும் மதிக்கும் புதிய இதயத்தை இறைவனிடம் வேண்டுவோம் என்ற அழைப்பையும் முன்வைத்தார், ஒருங் கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் துணைச்செயலர், அருள்பணி சாம்பினி.

1960-ஆம் ஆண்டு, மார்ச் 21-ஆம் தேதி, தென் ஆப்பிரிக்காவின் சார்ப்பெவில்லே எனுமிடத்தில் இனவெறிக்கு எதிரான அமைதிப் போராட்டத்தில் கலந்து கொண்டோர் மீது அந்நாட்டு இராணுவம் தாக்குதல் நடத்தி, 69 பேர் உயிரிழந்தது, 180 பேர் காயமடைந்ததை நினைவுகூரும் விதமாக, இனவெறிக்கு எதிரான உலக நாள் 1966-ஆம் ஆண்டு ஐ.நா. நிறுவனத்தின் பொது அவையால் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்-தக்கது.

### அனைவருக்கும் குடிநீரும், நலப்பணிகளும் கிடைக்க…

தொடர்ந்து, நீர் என்பது, கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு ஒரு வியாபாரப் பொருள் அல்ல, மாறாக அது அகில உலக அடையாளம், மற்றும், வாழ்விற்கும், உடல் நலத்திற்கும் ஆதாரம் என கடந்த திங்களன்று வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மார்ச் 22, கடந்த திங்களன்று சிறப்பிக்-கப்பட்ட உலக தண்ணீர் நாளையொட்டி, டுவிட்டர் செய்தியொன்றை விடுத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றைய உலகில் எண்ணற்ற சகோதரர், சகோதரிகள், போதிய நீரின்றி, அதுவும் சுத்தமான நீரின்றி வாடுகின்றனர் என்ற கவலையை வெளியிட்டுள்ளதுடன், அனைவருக்கும் குடிநீரும், நலப்பணிகளும் கிடைப்பதற்குரிய உறுதிப்பாட்டின் தேவை உள்ளது என, அச்செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# விண்ணகத் தந்தை நம்பிக்கையுடன் தெரிவுசெய்த புனிதர்-புனித யோசேப்பு

**வத்திக்கான்:** புனித யோசேப்பைப் போல ஞானத்தில் வளரவும், அவரைப்போல, இறைவனின் திட்டங்களைப் புரிந்து கொண்டு செயல்படுத்தவும், அப்புனிதரின் பரிந்துரையை நாடுவோம் என்று அழைப்புவிடுத்துள்ளார் - திருத்தந்தை

தன் மகனைக் காத்து வளர்ப்பார் என்று, விண்ணகத் தந்தை, நம்பிக்கையுடன் தெரிவுசெய்த மாபெரும் புனிதர், யோசேப்பு என்று அவர் வழங்கிய மறைக்கல்வி உரையின் இறுதியில் அறிவுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

### புனித யோசேப்பைப் போல வாழ…

திருத்தந்தை அருளாளர் ஒன்பதாம் பயஸ் அவர்கள், 1870-ஆம் ஆண்டு டிசம்பர் 8-ஆம் தேதி, புனித யோசேப்பு அவர்களை, உலகளாவிய திருஅவையின் பாதுகாவலராக அறிவித்தார். அந்த அறிவிப்பின் 150-ஆம் ஆண்டையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த டிசம்பர் 8-ஆம் தேதியன்று, புனித யோசேப்பு ஆண்டை அறிவித்தார் என்பது அனைவரும் அறிந்த-தொன்று.

150-ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதே டிசம்பர் 8-ஆம் தேதியன்று, "ஒரு தந்தையின் இதயத்தோடு" என்று பொருள்படும், "Patris corde" என்ற தலைப்பில், திருத்தூது மடல் ஒன்றையும் வெளியிட்டார்.

2020-ஆம் ஆண்டு டிசம்பர் 8-ஆம் தேதியன்று துவங்கிய புனித யோசேப்பு யூபிலி ஆண்டு, 2021-ஆம் ஆண்டு டிசம்பர் 8-ஆம் தேதி நிறைவடையும் எனவும் தெளிவுப்படுத்தினார்..

### "அன்பின் மகிழ்வு குடும்ப ஆண்டு"

மார்ச் 19, இவ்வெள்ளியன்று, புனித கன்னி மரியாவின் கணவரான புனித யோசேப்பு திருநாள் சிறப்பிக்கப்படுவதை, தன் மறையுரையின் இறுதியில் குறிப்பிட்ட திருத்தந்தை, அதே நாளில், "அன்பின் மகிழ்வு (Amoris Laetitia) குடும்ப ஆண்டு" ஆரம்பமாகும் என்பதையும் நினைவு கூர்ந்தார்.

'அன்பின் மகிழ்வு' என்ற தலைப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய திருத்தூது அறிவுரை மடல் வெளியிடப் பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிறைவை யொட்டி, மார்ச் 19-ஆம் தேதி, புனித யோசேப்பு திருநாளன்று, வத்திக்கானில், வலைத்தளம் வழியே, சிறப்பு கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சந்திப்பின்போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "அன்பின் மகிழ்வு குடும்ப ஆண்டை" துவக்கிவைப்பார் என்றும், மார்ச் 19-ஆம் தேதி, வெள்ளியன்று துவங்கும் இந்த சிறப்பு ஆண்டு, 2022-ஆம் ஆண்டு, ஜூன் 26-ஆம் தேதி, உரோம் நகரில் நடைபெறவிருக்கும் 10-வது உலக குடும்ப மாநாட்டுடன் நிறைவடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# ஏன் கழுதை? ஏன் குருத்தோலை?

**கழுதை மற்றும் குருத்தோலை வெளிப்படுத்தும் அடையாளம் என்ன?**

-ஜென் சந்தனசாமி, கூலிம்

யோவான் 12:14-ல்,' இயேசு ஒரு கழுதைக் குட்டியைக் கண்டு அதன்மேல் ஏறி அமர்ந்தார்', எனக் கூறப்பட்டுள்ளது. நாம் வழக்கமாக இது இயேசுவின் தாழ்ச்சியைக் குறிப்பாத குறிப்பிடுவோம். முற்காலத்தில், கிழக்கத்திய நாடுகளில் கழுதை மதிப்புக்குரிய ஒரு விலங்காகக் கருதப்பட்டது என்பதை வரலாறு மெய்ப்பிக்கிறது. திருவிவிலியத்திலும், யாயிரின் புதல்வர்கள் கோவேறு கழுதையின் மேல் பயணம் செய்தனர் என்பது நீதி 10:4-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல், அரச ஆலோசகரான அருத்தோபல் 2 சாமு 17:23-லும், சவுல் அரசனின் பேரன் மெபிபோசேத்து 2 சாமு 19:26-லும் கழுதை மீது ஏறி பயணம் செய்ததாக அறிகிறோம்.

ஆகவே, இயேசுவுக்கு முன்பே கழுதை பயணத்திற்குப் பயன்படுதப்பட்ட ஒரு விலங்காக இருந்துள்ளது. எனவே, கழுதையைத் தாழ்ச்சியின் அடையாளம் என்று மட்டும் சொல்வதற்கில்லை. இயேசு கழுதையின் மேல் அமர்ந்து வருவதற்கு சிறப்பாக மூன்று காரணங்கள் உண்டு. முதலாவதாக, செக்கரியா 9:9-ல் 'மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூரு; மகளே எருசலேம்! ஆர்ப்பரி. இதோ! உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர்; வெற்றி வேந்தர்; எளிமையுள்ளவர்; கழுதையின்மேல், கழுதைக் குட்டியாகிய மறியின்மேல் ஏறி வருகிறவர்' என்று முன்னறிவிக்கப்பட்டது நிறைவேற வேண்டும்.

இரண்டாவதாக, ஓர் அரசர் கழுதையின் மீது அமர்ந்து வருகிறார் என்றால் அவர் 'அமைதியை' நாடி வருகிறார் என்று பொருள்படும். இயேசு அமைதியின் அரசர். எனவே, அவர் கழுதையின்மீது அமர்ந்து எருசலேமுக்குள் சென்றது, தம்மைத்-தாமே கையளிக்கும் அமைதியின் அரசராக வருகிறார் என்பதை இந்த கழுதை சவாரி வெளிப்படுத்துகிறது.

மூன்றாவதாக, கழுதை பொதி (சுமை) சுமக்கும். இயேசு கழுதையைப்போல், எளிய மக்களுக்கு பணிவிடை செய்யும் சேவகனாகவும் காணப்படுகிறார்.

குருத்தோலை என்பது கிழக்கு மற்றும் மத்திய தரைக்கடல் பக்கம் வெற்றி, அமைதி மற்றும் நிலைவாழ்வின் அடையாளமாக அக்காலத்தில் பயன்படுத்தப் பட்டது. குருத்தோலையானது ஈச்ச ஓலைகள் அல்லது பேரிச்ச ஓலைகள் என்றும் விவிலியத்தில் காணப்படுவதை நினைவுகூர்தல் வேண்டும். எடுத்துக்காட்-டாக, லேவியர் 23:40-ல், "முதல் நாள்,



கவர்ச்சிகரமான மரங்களின் பழங்களையும், பேரீச்ச ஓலை, மற்றும் கொழுமையான தளிர்களையும், அலரி இலைகளையும் கொண்டு வந்து, ஆண்டவர் திருமுன் மகிழ்ந்திருங்கள்' என வாசிக்கிறோம்.

இவ்வாறாக, நெகேமியா 8:15-ல், கூடாரத்திருவிழாவின் போது பேரிச்ச ஓலைகள் பயன்படுத்தப்பட்டன எனும் குறிப்பும் உண்டு.

இதன் அடிப்படையில் எருசலேமில் கூடியிருந்த யூத மக்கள் இயேசுவை, உன்னதரின் அரசரை வரவேற்கவும் குருத்தோலைகள் பயன்படுத்தினர் எனலாம். குருத்து என்பது மாசற்ற தன்மையைக் குறிக்கிறது. அதில் பழுதேனும் இருக்காது. அது துளீர்விடும் தன்மையைக் கொண்டிருக்கும். அவ்வாறே இயேசுவும் குருத்து போன்ற ஆட்டுக்குட்டியாகவே விவரிக்கப்படுகிறார். ஆகவே, 'குருத்தோலையை' ஆட்டுக் குட்டிக்கும் ஒப்பிட்டுக் கூறலாம். யோவான் 1:29-ல், "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! என இயேசு குறிப்பிடப்படுவதையும் இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

-ஆர்.கே.

# கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் புனித வார வழிபாட்டு வழிகாட்டி

**கோலாலம்பூர்:** எதிர்வரும் புனித வாரத் -தில் மேற்கொள்ளப்படும் முக்கிய திருவழிபாட்டு நிகழ்வுகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை மாமறைமாவட்டத்தில் பேராயர் அலுலகம் வெளியிட்டுள்ளது. அதன்படி:

**I. புனித வியாழன் நற்கருணை ஆராதனை**

கத்தோலிக்கர் அனைவரும், நற்கருணை முன் ஆராதனையில் பங்கெடுக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த ஆராதனை பங்குத் தந்தை அறிவிக்கும் இறுதி காலவரை மட்டும் நீடிக்கும். ஆராதனை அறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் அவசியம் பின்பற்றப்பட வேண்டும்.

1. ஆராதனை முடித்துக்கொண்டவர்கள் உடனடியாக அறையை விட்டு வெளியேற வேண்டும்.

2. ஆராதனை அறை காற்றோட்டம் உள்ள அறையாக இருத்தல் அவசியம்.

3. ஆரதனை அறைக்கான MySejahtera பதிவு கருவி தனியாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். வெப்ப அளவு சோதிக்கப்பட வேண்டும்.

4.சமூக இடைவெளி பின்பற்றப்படுவதோடு, ஆராதனை அறையின் அளவுக்கு ஏற்ப மக்கள் கூட்டம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். (30%)

5. ஆராதனை அறைக்குள் நுழையும், வெளியேறும் வாசல்கள் முன்கூட்டியே உறுதிச்செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**மற்ற ஆலயங்களுக்கு வருகைப் புரிதல்**

வழங்கமாக புனித வியாழன் இரவு மேற்கொள்ளப்படும் இதர ஆலயங் களுக்கான வருகையானதுப் பொது மக்களின் நலன் கருதி இந்த ஆண்டு தடைசெய்யப்படுகிறது.

ஆலயங்களில். சிற்றாலயங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நறகருணை ஆராதன இரவு 11.30 மணிக்கு மேல் நீடிக்கக் கூடாது.

-பேராயர் அலுவலகம்

# கோல்பீல்டு பகுதியில் அந்நிய தொழிலாளர்களுக்கு உதவி

**பெஸ்தாரி ஜெயா:** ஒரு காலத்தில் கோல்பீல்டு, துவான் மீ என அழைக்-கப்பட்ட இப்பகுதியில் மேம்பாட்டுத் திட்டங்களின் காரணமாக தோட்டங்கள் அழிக்கப்பட்டு, இப்பகுதி உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளாக மாறிவருகின்றன.

இப்பகுதியில் பற்பல வேலைகளில் ஈடுபட்டு வந்த அந்நிய தொழிலாளர்கள் பலர் கோவிட்-19-ன் காரணமாக வேலையிழந்த நிலையில் குடும்பதோடு அவதியுற்று வருகின்றனர். அவர்களில் 38 கத்தோலிக்க இந்தோனேசிய குடும்பங்களும் அடங்கும்.

இவர்களின் அவல நிலையைக் கேள்வியுற்ற பெஸ்தாரிஜெயா, புனித வனத்து சின்னப்பர் பங்கின் பங்குத்தந்தை V.A. மைக்கல் அவர்களின் வேண்டுதலின் பேரில், அம்பாங்கில் வசிக்கும் சில கத்தோலிக் கர்கள் துன்புறும் அந்த இந்தோனேசியக் குடும்பங்களுக்குப் பலவித உணவு



*அம்பாங் தன்னார்வப் பணியாளர்களுடன் அருள்தந்தை V.A. மைக்கல்*

பொருள்களும் அடிப்படைத் தேவைக்கான இதரப் பொருள்களும் கடந்த மார்ச் 13-ஆம் திகதி அன்று தந்துதவினர்.

அருள்தந்தை அவர்கள், அவர்களுக்கான இந்தோனேசிய மலாய் விவிலியங்களையும் ஆசீர்வதித்து வழங்கியதோடு, அவர்களுக் காக சிறப்பு இறைவேண்டலும் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருஅவைக்குத் தோள் கொடுப்போம்

திருஅவை வாழ்வில் மிக முக்கியமான வாரமான புனித வாரத்தில் நுழைய நாம் தற்போது தயாராகி வருகிறோம். குருத்தோலைகளையோடு மக்கள் இயேசுவை எருசலேமுக்கு வரவேற்பதோடு புனித வாரம் தொடங்குகிறது. இன்றைய தினத்தைப் பாடுகளின் ஞாயிறு என்றும் அழைக்கப்படுகிறது.

இன்று இரண்டு நற்செய்தி வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன. திருப்பலி தொடங்குவதற்கு குருத்தோலை பவனிக்கு முன் முதல் நற்செய்தி வாசகம் வாசிக்கப்படுகிறது. முதல் வாசகத்தில், எருசலேமுக்குள் ஆரவாரத்துடன் குருத்தோலை பவனியுடன் இயேசு வரவேற்கப்படுகிறார். "தாவீதின் மகனுக்கு ஓசன்னா" என்ற மக்கள் ஆர்ப்பரிப்புடன் கழுதையில் இயேசு வருகிறார். ஆனால் அதே மக்கள் பின்னர் அவருக்கு எதிராக முழங்குகின்றனர்.

இதனை இயேசு எதிர்பார்த்தார். ஏனெனில் இதற்கு முன்பு, தம்மை காட்டிக் கொடுப்பார்கள் என தமது நெருங்கிய சீடர்களிடம் இயேசு பகிர்ந்து கொள்கிறார். சராசரி மனிதனாக அந்த துன்பங்களை அவர் ஏற்றுக் கொண்டார். முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா முன்னறிவித்தது போல, யூதர்களின் அவலச்சொற்களையும் சித்ரவதையையும் இயேசு தாங்கி கொண்டு, உறுதியாக நின்றார். கேட்பாரற்று இருக்கும் இயேசுவிற்காக வாதாட யாரும் முன்வரவில்லை.

"சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்"(பிலி.2:8) என இரண்டாம் வாசகம் கூறுகிறது. ஏன் இயேசு துன்பப்பட, பாடுபட, சித்ரவதைப்பட துணிந்தார்? அதனால் அவருக்கு என்ன பயன்? யாருக்காக? இயேசுவைப் பொறுத்தவரையில், அவர் கொண்ட பாதையிலும் கொள்கையிலும் உறுதியாக நின்று, இறைவார்த்தையைத் தெளிவாக போதித்தார். "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது"(எபி.4:12). இயேசு போதித்த உயிருள்ள வார்த்தை, யூதச் சமயத் தலைவர்களைக் குற்றுயிரும் கொலையுயிருமாக ஆக்கியது. எருசலேம் ஆலயத்தில் வணிகர்களையும் நாணயம் மாற்றுவோரையும் இயேசு விரட்டியடித்தப் போது இந்த விரோதம் உச்சக்கட்டத்தை எட்டியது. கால-நேரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த யூதத் தலைவர்கள், இறை நித்தனை, அரச நித்தனை ஆகியக் குற்றச்சாட்டுகளை அவர் மீது சுமத்தினர். இயேசுவின் மீட்பின் செய்தியைத் தொடக்கத்திலிருந்தே யூதச் சமயத் தலைவர்கள் தப்பாக புரிந்து கொண்டனர். இதனால் இயேசுவைப் பழி தீர்க்க யூதத் தலைவர்கள் வழி தேடினர்.

குருத்து ஞாயிறு வாசகத்தை சற்று மனதில் நிறுத்திச் சிந்தித்துப் பார்த்தால், யூத சமயத் தலைவர்களைப் போலவும், "தாவீதின் மகனுக்கு ஓசன்னா" என்று ஆர்ப்பரித்தப் பின்னர் "அவனைச் சிலுவையில் அறையும்" என்று கூச்சலிடும் மக்களைப் போலவும் நாம் இருக்கிறோமா என்ற எண்ணம் நம் மனதில் தோன்றும்! இயேசு விட்டுச் சென்ற திரு அவை, நிறைவான திரு அவை அல்ல. அது பலவீனமும் குறைகளும் நிறைந்த திருஅவையைத்தான் இயேசு ஏற்படுத்தினார். அனைவரும் உயிருக்குப் பயந்து ஓட்டம் பிடித்ததோடு, தெரியவே தெரியாது என சத்தியம் செய்தனர்.

திரு அவை புனிதத்தை நோக்கி பயணம் செய்கிறது என்பதை மனதில் நிறுத்திக் கொண்டு, எந்த வகையில் திருஅவையில் நமது பங்கை நாம் ஆற்ற முடியும் என்பதை சிந்தித்துச் செயல்படுந்த்துவோம். நல்லக் கருத்துகளுக்கும் போதனை களுக்கும் மனதைத் திறந்து வைப்போம். தூரத்தில் இயேசுவைப் பின்தொடர்ந் தவரும் மனம் மாறியவருமான பேருது-வைப் போல நாம் உள்ளோமா? சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோனைப் போல் உதவிக்குத் தோள் கொடுக்கத் தயாராக உள்ளோமா?

சிந்தனை செய்வோம்....

*அந்தோணி இன்னாசி ஸ்ரீ கெம்பாஙான்*

**குருத்து ஞாயிறு**
எசா: 50: 4-7
திபா: 22: 7-8. 16-17a. 18-19. 22-23
பிலி : 2: 6-11
மாற்கு: 14: 1- 15: 47
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : குருத்து ஞாயிறு**